www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Register No. [ ]

10 R

# காலாண்டுத் தேர்வு – 2024

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

I. குறிப்புகள் : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15x1=15

1. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது : அ) சருகும் சண்டும் ஆ) இலையும் சருகும் இ) தோகையும் சண்டும் ஈ) தாளும் ஓலையும்
2. 'கேட்டவர் மகிழப்பாடிய பாடல் இது' - தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் முறையே : அ) பாடல்; கேட்டவர் ஆ) பாடிய; கேட்டவர் இ) பாடல்; பாடிய ஈ) கேட்டவர்; பாடிய
3. 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா' எனப் பாராட்டப் பெற்றவர்
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கண்ணதாசன் ஈ) கம்பர்
4. உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்று கூறியவர்
   அ) தொல்காப்பியர் ஆ) கம்பர் இ) திருவள்ளுவர் ஈ) ஔவையார்
5. "பாடுஇமிழ் பனிக்கடல் பருதி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி
   அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
6. 'முறுக்கு மீசை வந்தார்' என்பது :
   அ) அன்மொழித்தொகை ஆ) உவமைத்தொகை இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை
7. பெப்பர் என்னும் இயந்திர மனிதனை உருவாக்கிய நாடு : அ) ஜப்பான் ஆ) சீனா இ) ரஷ்யா ஈ) அமெரிக்கா
8. அருந்துணை என்பதைப் பிரித்தால்
   அ) அருமை+துணை ஆ) அரு+துணை இ) அருமை+துணை ஈ) அரு+இணை
9. கூற்று 1 : போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.
   கூற்று 2 : அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது
   அ) கூற்று 1 மற்றும் 2 சரி ஆ) இ) ஈ)
10. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?
    அ) தளரப்பிணைத்தால் ஆ) அள்ளி முகர்ந்தால் இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்
11. முல்லை நிலமக்களின் உணவுப்பொருள்கள்
    அ) வரகு, சாமை ஆ) மலை நெல், தினை இ) செந்நெல், வெண்ணெய் ஈ) மீன், செந்நெல்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கருவளர் வானத்து இசையில் தோன்றி
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்
உந்து வளி குளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்

12. இப்பாடலின் ஆசிரியர் : அ) கீரந்தையார் ஆ) கம்பர் இ) பாரதியார் ஈ) பெருங்கௌசிகனார்
13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்? : அ) பரிபாடல் ஆ) மலைபடுகடாம் இ) முல்லைப்பாட்டு ஈ) காசிக்காண்டம்
14. 'ஊழ் ஊழ்' என்பதன் இலக்கணக் குறிப்பு :
    அ) அடுக்குத்தொடர் ஆ) பண்புத்தொகை இ) வினைத்தொகை ஈ) உவமைத்தொகை
15. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகை எழுதுக : அ) கரு-உரு ஆ) உரு-உந்து இ) ஊழி, ஊழ் ஈ) ஊழி-ஊழியும்

II. குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் (வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) 4x2=8

16. 'இறடிப் பொம்மல் பெறுகுவீர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க :
    அ) ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடுகிறோம். ஆ) பூவின் தோற்றநிலை அரும்பு எனப்படும்.
18. "கலைஞர், பழுமரக்கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர் படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்" - பேராசிரியர் அன்பழகனார் - இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.
19. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
20. 'நமக்கு உயிர்காற்று, காற்றுக்கு வரம் மரம் - மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' இது போன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக
21. "வினை" - என முடியும் திருக்குறளை எழுதுக.

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும் 5x2=10

22. கலைச்சொல் தருக.: அ) Myth ஆ) Vowel
23. எண்ணுப்பெயர்களை கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.:
    அ) நாற்றிசையும் செல்லாத நாடில்லை, ஆ) ஐந்துசால்பு ஊன்றிய தூண்
24. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.: அ) விடு - வீடு ஆ) விதி - வீதி
25. குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.: அ) அருகில் அமர்க ஆ) மீளாத்துயர்



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

26. அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

27. 'சீசர் எப்போதும் என்சொல் பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்' என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

28. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடர்களை முழுமை செய்க:

அ) பசுமையான ........ ஐக் .......... கண்ணுக்கு நல்லது (காணுதல், காட்சி).

ஆ) காட்டு விலங்குகளைச் .............. தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் ...... திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)

**IV. குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்** 2x3=6

29. கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தமிழகத்தில் வழங்கப்படும் சொற்கள் குறித்து விளக்குக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு விருந்தினர் வேறு முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர் அதனால் தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்

அ) விருந்தினர் என்போர் யார்? ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?

இ) இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

31. வாழை இலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக.

**V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும் (34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)** 2x3=6

32. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்து கொண்ட இரண்டினை எழுதுக.

33. நீதிவெண்பா கல்வியை எவ்வாறு கற்கவேண்டும் எனக் கூறுகிறது.

34. 'தண்டலை மயில்களாட' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல் (அல்லது) 'புண்ணியப் புலவீர்' எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணம்

**VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்** 2x3=6

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகை நிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.

36. சொற்பொருள் பின்வருநிலை அணியை விளக்குக. (அல்லது) தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.


37. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும் - இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

**VII. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்** 5x5=25

38. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி, உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறு பரிந்துரைத்து நண்பருக்குக் கடிதம் எழுதுக (அல்லது) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சிக் கண்டு கவினுற எழுதுக



41. மதிவதினி தன் தந்தை விமலாராஜா அவர்களிடம் நூலகத்தில் உறுப்பினர் ஆக வேண்டினாள். அவரும் மதிவதனியிடம் 200/- ரூபாயும் 33, பிபி கார்டன், EBP நகர், கரூர் மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார். கிளை நூலகத்திற்குச் சென்ற மதிவதனியாக, தேர்வர் தன்னைக் கருதி கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ)தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி: திறன்பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை; காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்; இவர்களை நெறிப்படுத்த நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக. (அல்லது)

ஆ) மொழிப்பெயர்ப்பு : அ) If you talk to a man in la language he understands, that goes to his nead if you talk to him in his own language that goes to his heart. - Nelson Mandela, ஆ) Language is the road map of culture. It tells you where its perople come from and where they are going - Rita Mae Brown

**VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** 3x8=24

43. போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர். நாடகக் கலைஞர் - திரைக்கலைஞர், இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. (அல்லது)

இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

44. 'புயலிலே ஒரு தோணி' கதைப்பகுதியில் இடம் பெறும் கடற்பயண நிகழ்வுகளை விவரித்து எழுதுக. (அல்லது) கருப்பினப் பெண் மேரியின் கல்வி முன்னேற்றம் குறித்து எழுதுக.

45. உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத் திருவிழாவிற்கு சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்கு.

அல்லது)

விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.



Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com